முருகப்பெருமான் துணை

**மகான் தன்வந்திரி அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**01.12.2022**, வியாழக்கிழமை

1. ஆறுமுக ஞானியே அரங்கா
ஆற்றல் மிக்க தவசியே தேசிகா
மாறுதலை உலகினில் செய்ய
மகா சக்தியாக வந்த குருராசா
2. அரசனே உன் பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது தேள் திங்கள்
வரமென மூவைந்து திகதி குருவாரம்
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 15 ம் நாள் 01.12.2022, வியாழக்கிழமை)
வழங்குவேன் அனுகூல ஆசி
3. ஆசிதனை தன்வந்திரி யானும்
அறிவிப்பேன் உலகோர் நலம்பெற
வாசிவென்ற ஞானிகள் படை
வரம்தந்து அரங்கனோடு இருக்க
4. இருக்கவே கலியுக மக்களெல்லாம்
ஏழாம்படை வீடு நோக்கி வந்து
கருத்தாக அரங்கனை சேவித்து
காப்பாயென மகாமந்திர தீட்சை
5. தீட்சை ஏற்று வலம் வர
தொடர் செபம் பூசையாக
தீட்சை வழி அனுதினமும் தொடர
தெரியவரும் காரிய வெற்றி பலம்
6. பலமான தேட்டு தன வளமும்
பாடிடுவேன் சர்வ பலமும் கூடி
சலனமில்லா வாழ்வும் சக்தியும்
சற்குருவின் அருளாய் கண்டுதேறுவர்
7. தேறுவர் நல்லொழுக்கம் கூடி
தெய்வ நெறிவிட்டு அகலாதபடி
மாறுவர் ஞானவான்கள் ஆகவே
மண்ணலுகை காக்கும் ஞானிகளாக
8. ஆகவே ஞானயுகம் படைக்கும்
ஆற்றல் மிக்கச் சூழல் தன்னை
செகமெங்கும் அரங்கன் சக்தி
செம்மைபட அமைத்து இனிதே
9. இனிதே அரங்கன் வேதமும் தர்மமும்
இணைந்து உலகை காக்கும்
கனி வேலவன் வெளிப்பாடாக
கண்டுரைப்பேன் உலக மாற்றம்

10. மாற்றம் அரங்கன் சக்திமிகு
மகான்கள் படை பெருகி
ஆற்றல்பட ஞான உலகு அமையும்
ஆறுமுகனார் நாமசெபம் போற்றி

11. போற்றியே அன்னதான சேவையை
பேருலகம் எங்கிலும் வளர்க்க
மாற்றம் தரும ஞான ஆட்சியாக
மனிதர்கள் ஆட்சி முடிவுற்று துவங்கும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–